செ.வெ.எண்: 17 நாள்: 06.01.2017

## புதுக்கோட்டை மாவட்டத்தில் 1200 பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி, சேலைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், முள்ளூரில் உள்ள பயனாளிகளுக்கு பொங்கல் திருநாளையொட்டி விலையில்லா வேட்டி, சேலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் 05.01.2017 அன்று வழங்கினார்.

இதில் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி, சேலைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கி கூறியதாவது:

தமிழகஅரசு பொதுமக்களின் நலனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்க தமிழகஅரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள முள்ளூரில் 1200 பயனாளிகளுக்கு தரமான விலையில்லா வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகஅரசு பொதுமக்களின் நலனை மேம்படுத்தும் வகையில் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம், ஏழை பெண்களின் திருமணத்திற்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எனவே அனைத்து பொதுமக்களும் இத்தகைய திட்டங்களை உரிய முறையில் பெற்று பயன்பெறுவதுடன் இந்த விலையில்லா வேட்டி, சேலைகளை பயனாளிகள் அணிந்து பொங்கல் திருநாளை சிறப்புடன் கொண்டாட வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆப., கூட்டுறவு சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**